1983 மார்ச் 3]

161. தமிழ் நாடு 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) சட்டத்தில் திருத்தம் செய்வது சம்பந்தமாக கல்வி-அறிவியல்-தொழில் நுட்பத்துறையின் 31—3—1982ஆம் தேதியிடப் பெற்ற 575ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (தமிழ்நாடு 1976ஆம் ஆண்டு தனியார் கல்லூரிகள் (ஒழுங்கு முறை) சட்டத்தின் (குடியரசுத் தலைவரது சட்டம் எண். 10/1976) 54(2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

162. ஆயத்துறை அதிகாரிகளுக்கு அதிகாரத்தைப் பிரித்துக் கொடுப்பது குறித்த தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு (உரிமம்-அனுமதிச் சீட்டு விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமாக) மதுவிலக்கு-ஆயத்துறையின் 18—1—1982ஆம் தேதியிடப் பெற்ற 21ஆம் எண். அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 9/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

163. தமிழ்நாடு 1981ஆம் ஆண்டு மதுபான (உரிமம்-அனுமதிச் சீட்டு) விதிகளில் திருத்தம் செய்வது சம்பந்தமான மதுவிலக்கு-ஆயத்துறையின் 10—11—1982-ஆம் தேதியிடப் பெற்ற 788ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1937ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

164. தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்தின் 1980—81ஆம் ஆண்டிற்கான 16ஆவது ஆண்டறிக்கை (ஆங்கிலம்-தமிழ்). [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-அ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

39. ஓட்டல்கள், ரெஸ்டாரெண்டுகளில் உணவுப் பொருள்கள்-பான வகைகள் விற்பனை செய்வதன் பேரில் வரி வசூல் செய்வது குறித்த ஆணைகளைத் திருத்தியமைப்பது சம்பந்தமான வணிக வரிகள்-சமய அறக்கட்டளைகள் துறையின் 22—10—1982ஆம் தேதியிடப்பெற்ற 1187-ஆம் எண். அரசாணையில் வெளியான சட்டப்படிக்கல்லாத ஆணைகள்.

TAMIL NADU LEGISLATIVE LIBRARY
7 - DEC 1983
MADRAS